# DEPOSITION OF WITNESS

## (Chapter of XXIII, Criminal Procedure Code)

IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, CHENNAI.
**SC.No.50/2025**

PROSECUTION WITNESS No. 7

Name : R.சரவணன்

Father's Name : S.V.ராமச்சந்திரன்

Age :

Address :

Solemnly affirmed in accordance with provision of Act X of 1873 on the 17th day of July, 2025.

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை :-**

நான் தற்போது, V3 J.J. நகர் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 28.04.2024 அன்று நான் சென்னை, K11– CMBT காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்தபோது திருமதி. பொன்மாலா பெண், வயது.47 க.பெ.மைக்கேல் துரைப்பாண்டி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகாரைப் பெற்று, நிலைய குற்ற எண். 161/2024 சட்டப்பிரிவுகள், 174 கு.வி.மு.ச–ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து விசாரணைக்காக ஆய்வாளர் பார்வைக்கு வைத்தேன். அந்த முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.3**. 29.04.2024 அன்று காவலர் நாகராஜ் 53521 என்பவரை வழக்கில் சம்பந்தப்பட்ட இறந்து போன மைக்கேல் துரைப்பாண்டி என்பவரின் பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்ய அடையாளம் காட்டவேண்டி கடிதம் கொடுத்து அனுப்பினேன். காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :-**

28.04.2024 அன்று 8 மணிக்கு புகார்தாரர் புகார் கொடுக்கப்பட்டது. நான் உடனே முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். சந்தேக மரணமாகத்தான் வழக்கு பதிவு செய்தேன். மருத்துவமனைக்கு பிரேதத்தை அனுப்பிவிட்டுதான்

புகார் கொடுத்தார்கள், அதனால் நான் பிரேதத்தை சம்பவ இடம் சென்று பார்க்கவில்லை. புகாரில் மதியம் 2.50 மணிக்கு இறந்து விட்டதாக கூறப்பட்டுள்ளது. புகார் பதிவு செய்ய ஏன் காலதாமதமானது என்பது குறித்து புகாரில் சொல்லவில்லை, ஆனால் நான் விசாரித்தபோது, சம்பவம் நடந்ததும் அடிபட்ட நபரை மருத்துவமனைக்கு வாதியும், அவரது மகனும் அழைத்துச் சென்று அவரது இறப்பை உறுதி செய்த பிறகு, அவரது உறவினர்கள் புகார் எதுவும் தேவையில்லை என கூறியதால் காலதாமதமாக வந்து புகார் தந்ததாக தெரியவந்தது. காலதாமதம் குறித்த விவரத்தை நான் ஆய்வாளர் என்னை விசாரிக்கும் போது சொல்லியுள்ளேன். சம்பவம் குறித்த தகவல் மருத்துவமனையிலிருந்து கிடைக்கப் பெறவில்லை, வாதி தான் முதலில் தகவல் அளித்தார். நான் இரவு 23.00 மணியளவில் பிரேதத்தை KMC மருத்துவமனை சவக்கிடங்கில் வைத்து பார்த்தேன். இறந்தவர் 2.30 மணிக்கு இறந்ததை மறைத்து 8.00 மணிக்கு தான் புகார்தாரர் புகார் கொடுத்தார். வாதி கொடுத்த புகார் பொய்யான புகார் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u> –** இல்லை

| |
|---|
| Typed to my dictation in my presence and hearing and under my personal dictation and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted and signed by the witness to be correct. |
| **Principal Judge** |